**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,ஆண்டிபட்டி.**
**முன்னிலை: செ.சுரேஷ்குமார் MSc.,MA.,ML.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆண்டிபட்டி.**
**2019ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.30/2019**

**சுப்பையா** ...**வாதி**

**-எதிர்-**

1. **மணி**
2. **சுப்புராஜ்**
3. **பாக்கியராஜ்** ...**பிரதிவாதிகள்**

----

இந்த வழக்கு கடந்த 09.04.2019-ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தேதியே இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 22.10.2019ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.ஜக்கையன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.எஸ்.தாமோதரன் அவர்கள் ஆஜராகியும், பிரதவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும், ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டு வாதி தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்துவந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

வாதியின் அனுபவத்தில் உள்ள பிராது சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ, முகவர்களோ அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும் படிக்கும், வாதிக்கு பிரதிவாதிகளை இவ்வழக்கு செலவு தொகையை கொடுக்க கோரியும், தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**:-

பிராது சொத்துக்கள் ஆதியில் ஒரு ராமராஜ் அவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் தங்களது உடமையில் வைத்து அனுபவித்து வந்து 11.06.1986ம் தேதி வாதி கிரையம் பெற்று தனது உடமையில் வைத்து அனுபவித்து வந்து கிஸ்தி இரசீதுகள் செலுத்தி வந்து தன்னுடைய தனிப்பட்ட உடமையில் வைத்து அனுபவித்து வருகிறார்.

பிராது சொத்துக்களை வாதி தன்னுடைய உடமையில் வைத்து கம்பு, மாக்காச்சோளம் போன்ற பயிர்களை விவசாயம் செய்து அனுபவித்து வந்த நிலையில் பிராது சொத்துக்கள் விலையேற்றம் அதிகமான காரணத்தினாலும் பிராது சொத்துக்களை எப்படியாவது வாதியிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி வாதியை பிராது சொத்துக்களில் இருந்து விரட்டிவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தில் வாதிக்கு பல

இடைஞ்சல்களை செய்து வருகிறார்கள். மேலும் பிராது சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் கடந்த 13.11.2017ம் தேதி ஒரு பாகவிஸ்திபத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்கண்ட ஆவணம் பிரதிவாதிகளால் மேசாடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாகும். மேற்கண்ட ஆவணத்தை பொறுத்து ஆரம்ப முதலே இல்லா நிலையதும், செல்லா நிலையதும் ஆகும். மேற்கண்ட ஆவணம் வாதியின் உரிமையை எந்த வகையிலும் பாதிக்கப்பட கூடியதாக இல்லையென்பதோடு வாதியின் நலனை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதுடன் வில்லங்கம் பார்த்த பின்புதான் வாதிக்கு மேற்படி ஆவணம் மோசடியாக உருவாக்கிய விபரம் தெரியவந்தது.

வாதியின் பிராது சொத்துக்களில் பிரதிவாதிகள் மற்றும் அவரது வகையாட்கள் கடந்த 02.03.2019ம் தேதி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்தை வாதி தனது வகையாட்களுடன் மிக சிரமத்தின் பேரில் தடுத்து நிறுத்தி மேற்கண்ட பிரதிவாதிகளின் அக்கிரம செயலை நீதிமன்றத்தின் மூலமாகத்தான் தடுத்து நிறுத்த முடியும் என்று எண்ணி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கிறார்.

பிரதிவாதிகள் பிராது சொத்தை எந்த வகையிலும் அபகரிப்பதற்காக எந்த வழியிலாவது தொடர்ந்து இடைஞ்சல்களை ஏற்படுத்தி வந்து பிராது சொத்தை அபகரிக்ககூடும் என வாதி அச்சமுறுவதாலும் அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிக்கு பிரதிவாதிகளை வழக்கு செலவு தொகையை கொடுக்க கோரியும் வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

பிராது சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் அந்நியர்கள் ஆவார்கள். வாதியின் உடமையிலும் சுவாதீனத்திலும் இருந்து வருகின்ற பிராது சொத்தை பொறுத்து பிரதிவாதிகளின் அக்கிரமச்செயல்களை தடுத்து நிறுத்த நீதிமன்றத்தின் மூலம் தான் தடுக்க முடியும் என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு வழங்கவேண்டியும் இல்லாதுபோனால் வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் தாங்க முடியாத இழப்பும் ஏற்படும்.

**2)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**3)** இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டும் ஆஜர் இல்லாததாலும், தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

**4)** வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5)** வாதி தரப்பில் 11.06.1986ம் தேதிய வாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் எஸ்.ஆர.ஒ.நகல் வாதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டும், 10.09.2018ம் தேதிய பிராது சொத்திற்குாயி வில்லங்க சான்றிதழ் வாதசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டும்,

30.10.2018ம் தேதிய பிராது சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் வாதசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டும், 13.11.2017ம் தேதிய பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாகவிஸ்தி பத்திரம் வாதசா.ஆ,4 ஆக குறியீடு செய்யப்பட்டும், 05.09.2018ம் தேதிய பிராது 1வது லக்க சொத்திற்குரிய கணிணி சிட்டா மின்னஞ்சல் நகல் வாதசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டும், பிராது சொத்திற்குரிய கிஸ்தி ரசீதுகள் 3 வாதசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வூாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இறுதியாக வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) இறுதியாக வாதி அனுபவத்தில் உள்ள பிராது சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவரது வகை ஆட்களோ, அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாள் வியாழக்கிழமை இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

(ஒம்).செ.சுரேஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.

<u>**வாதி தரப்பு சாட்சி:**</u>

வா.சா.1 சுப்பையா

<u>**வாதீ தரப்பு சான்றாவணங்கள்**</u>:

வா.சா.ஆ.1 11.06.1986ம் தேதிய கிரையப்பத்திரம் – எஸ்.ஆர்.ஓ் நகல்

வா.சா.ஆ.2 10.09.2018ம் தேதிய வில்லங்க சான்றிதழ் – அசல்

வா.சா.ஆ.3 30.10.2018ம் தேதிய வில்லங்க சான்றிதழ் – அசல்

வா.சா.ஆ.4 13.11.2017ம் தேதிய பாகவிஸ்தி பத்திரம் - எஸ்.ஆர்.ஒ.நகல்

வா.சா.ஆ.5 05.09.2018ம் தேதிய கணிணி சிட்டா – நகல்

வா.சா.ஆ.6 கிஸ்தி இரசீதுகள் எண்ணம்-3 – அசல்

<u>**பிரதிவாதீ தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:**</u>

**இல்லை.**

(ஒம்).செ.சுரேஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.